# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*************

மனு எண்: 1004/2017/ஊராட்சி

ஆணை எண்: 194 /2017

நாள்: 01 /08/2017

திரு. சே. அப்துல் பாரி,
த/பெ. சேக் முகமது,
2236, நடுத்தெரு, புத்தாநத்தம்,
மணப்பாறை வட்டம்,
திருச்சி மாவட்டம் – 621 310. - மனுதாரர்

திரு. வெங்கட்ரமணன்,
சிறப்பு தனி அலுவலர்,
புத்தாநத்தம் பஞ்சாயத்து அலுவலகம்,
மணப்பாறை வட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், புத்தாநத்தம் ஊராட்சியில் வசித்து வரும் திரு. சே. அப்துல் பாரி, என்பவர் அவருடைய 15.7.2017 நாளிட்ட மனுவில் அவரது மனைவியின் பெயரில் உள்ள வீடு சர்வே எண். 582 / 8ல் உள்ளது என்றும், வீட்டின் கிழக்கு புறம் உள்ள சர்வே எண். 582/9 ல் பொதுப்பாதை என்றும், அதில் சபீனாபேகம் / க/பெ. இஸ்மாயில் என்பவர் கழிப்பறை கட்டி ஆக்கிரமித்துள்ளார் என்றும் தெரிவித்து, அதனை அகற்ற பல்வேறு அலுவலர்களிடம் முறையீட்டும் நடவடிக்கை எடுக்காததால், சென்னை உயர்நீதிமன்ற கிளையில் W.P. No.1254 /2017 ல் தொடர்ந்த வழக்கில், 21.2.2017 தேதிய தீர்ப்பில் சட்டப்படி ஆக்கிரமிப்பை 8 வாரத்திற்குள் அகற்ற உத்திரவிடப்பட்டது என்றும் தெரிவித்தார். நீதிமன்ற ஆணைப்படி மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற

பிரதிவாதி திரு. வெங்கட்ரமணனுக்கு அறிவிக்கை அனுப்பியதன் பேரில், வெங்கட்ரமணன் சபீனாபேகத்திற்கு சாதகமாக வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் தவறான அறிவிக்கை அனுப்பி இருந்தார் என்றும், அதனை எதிர்த்து சபீனாபேகம் W.P. No. 5046 /2017ல் உயர்நீதி மன்றத்தில் (மதுரை கிளை) ரிட் மனு தாக்கல் செய்தார் என்றும், அதன் பேரில் உயர்நீதி மன்றம் தனது உத்திரவில் மணப்பாறை வட்டார வளர்ச்சி அலுவலர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து சட்டப்பிரகாரம் ஆக்கிரமிப்பை அகற்ற உத்திரவிட்டதாகவும் தெரிவித்து தவறான தகவல் தந்து, திருமதி. சபீனாபேகத்திற்கு சாதகமாக செயல்பட்ட திரு. வெங்கட்ரமணன் புத்தாநத்தம் பஞ்சாயத்தில் 22 ஆண்டுகளாக பணி புரிவதாகவும், பல லட்ச கணக்கில் முறைகேடுகள் புரிந்து, சுமார் 80 லட்சத்திற்கு அவரது மனைவி பெயரில் வீடு கட்டியுள்ளார் எனத் தெரிவித்து, அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு புத்தாநத்தம் ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

<u>பெறுநர்</u>
திரு. சே. அப்துல் பாரி,
த/பெ. சேக் முகமது,
2236, நடுத்தெரு, புத்தாநத்தம்,
மணப்பாறை வட்டம்,
திருச்சி மாவட்டம் – 621 310.

**நகல்**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
திருச்சி . (இணைப்புடன்)